**மத்திய மாகாண சபையின் 2015**

---

மத்திய மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பா விபரமான அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபையின் நிதியம்

(அ) மாகாண சபை நிதியக் கணக்குகள் 2016 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2016 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்குகள் தொடர்பான விபரம் | 2015 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் | | |
|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 34 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 02 | 02 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 66 | 64 | 02 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 05 | 03 | 02 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 02 | - |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் * | 04 | 04 | - |
| (vii) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - |
| | மொத்தம் | 114 | 110 | 04 |

* பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனம் (REDA) 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரை கணக்குகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

2.2.2. நிதி ஏற்பாட்டு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 03 செலவினத் தலைப்புகளில் 06 செலவின விடயங்களின் கீழ் ரூபா 9,625,000 ஆன மதிப்பீட்டு நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 09 செலவினத் தலைப்புகளில் 12 செலவின விடயங்களின் கீழ் ரூபா 939,000 ஆன மதிப்பீட்டு நிதிஏற்பாடு முழுமையாக வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மூலதச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 9,920,518 ஆன செலவினமொன்று மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கட்டுநிதிக் கணக்கு**

மாகாண திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,093,265 ஆக இருந்ததுடன், அது ரூபா 1,072,481 கூட்டுத்தொகையான வரவு மீதியொன்றையும் ரூபா 20,784 கூட்டுத்தொகையான செலவு மீதியொன்றையும் கொண்டிருந்தது. இச்செலவு மீதி தும்பனே பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த கட்டுநிதிக்குரித்தாக கூடுதலாக தீர்க்கப்பட்ட ரூபா 20,784 என்பது அவதானிக்கப்பட்டது.

**2.2.4 அனுப்புதல் கணக்கு**

நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் வங்கி மீதியில் உள்ளடக்கப்பட்ட 80074310 ஆம் இலக்க பொருட்களை அடகு வைப்போரிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் அனுப்புகை கணக்கின் மீதி ரூபா 725,100 ஆக இருந்த போதிலும், வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அது ரூபா 13,725,100 ஆக இருந்தமையால் ரூபா 13,000,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

2.2.5 வைப்புக் கணக்குகள்

(அ) மாகாண திறைசேரி பொது வைப்புக் கணக்கில் ரூபா 462,332,378 ஆன மீதியொன்றாக இருந்ததுடன், 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த 17 நிறுவனங்களின் வைப்புக்கள் ரூபா 9,136,985 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபையின் அடிப்படை நோக்கங்களுக்கு முரணாக வகையில் இரண்டு அரச வங்கிகளில் ரூபா 1,264,475,868 ஆன நிலையான வைப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

**2.2.6 மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 40 பிரதேச செயலகங்களில் நீண்டகாலம் அறவிடப்படாமல் காணப்படுகின்ற மாகாணசபை உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 149,556,454 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 63,843,182 தொகை 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலமாகவும் ரூபா 85,713,272 தொகை 04 ஆண்டு முதல் 24 வரையான காலத்திற்குரியதாகவும் இருந்தன. மேலும் வில்கமுவ வலயக் கல்வி

அலுவலகத்தினால் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் வேதனங்கள் என்பவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணம் ரூபா 6,444,000 தொகை பின்னர் சரிசெய்யப்பட்ட போது மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண சபை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் வரவு எல்லை ரூபா 5,135,038 ஆல் விஞ்சியிருந்தது.

### 2.2.7 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

அந்தந்த திணைக்களங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் மாகாண நிதியக்கணக்கு (மாகாண திறைசேரி புத்தகங்கள்) ஆகியவற்றுக்கு இடையே பின்வருமாறு ரூபா 16,461,141 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

| கணக்கு விபரம் | அந்தந்த திணைக்களங்களின் கணக்கின் பிரகாரம் மீதி | மத்திய மாகாண நிதியத்தின் கணக்கின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கட்டுநிதிக் கணக்கு | 417,570 | 510,476 | (92,906) |
| பொது வைப்புக் கணக்குகள் (3) | 5,043,177 | 5,010,056 | 33,121 |
| மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 14,437,625 | 14,560,268 | (122,643) |
| அனுப்புகை கணக்கு | 13,725,100 | 725,100 | 13,000,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் (மீதிகள் 4) | 1,204,128 | 382,002 | 822,126 |
| நடைமுறைப் சொத்துக்கள் (மீதிகள் 3) | 162,575 | 470,838 | (308,263) |
| நானாவித பொறுப்புக்கள் (மீதிகள் 2) | 3,401,074 | 271,368 | 3,129,706 |
| மொத்தம் | 38,391,249 | 21,930,108 | 16,461,141 |

### 2.2.8 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை

மாகாண சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்படாதிருந்ததுடன், அவ்வாறான சொத்துக்கள் காணப்படுவதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,449,155,414 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மாகாண சபைக்கு சொந்தமாக இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது..

### 2.2.9 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடதும்பர சித்தார்த்த ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 20,000,000 தொகை உடதும்பர பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தெல்தெனிய வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2012 யூன் 20 ஆந் திகதி இந்தக் காணியின் உரித்து கையேற்கப்பட்டிருந்த

போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண திறைசேரி, சுகாதார திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றின் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 686,767 தொகையான விதவைகள் அநாதைகள் மற்றும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கண்டி புற்றுநோய் நிலையத்திற்கு உதவியாக கட்டுகஸ்தொட்டை, மாத்தளை மற்றும் கம்பளை வலயக் கல்வி அலுவலகங்களினால் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 64,750 கூட்டுத்தொகையான பணத்தை அந்நிலையத்திற்கு வழங்காமல் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 16 வரையான காலப்பகுதியில் ரணவிரு கொடி விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 48,983 ஆன பணத்தை ரணவிரு சேவா அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யாமல் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(உ) ‘‘சில்பாபிமானி ஹரசர’’ விழாவிற்காக 2013 திசெம்பர் 19 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 17 வரையான காலப்பகுதியில் ரூபா 74,425 தொகை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 41,275 ஆன வைப்புக்கள் 2 ஆண்டுகளை விஞ்சியிருந்தது.

(ஊ) இலங்கை மும்மொழி நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2012 யூலை 26 ஆந் திகதி கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 15,000 தொகை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்படாத பொதுசன உதவி மற்றும் நோய் உதவித்தொகை ரூபா 18,400 தொகை நடப்பாண்டின் செலவின விடயத்திற்கு மிகை அறவீடொன்றாக பதிவுசெய்யாமல் லக்கல பிரதேச செயலகத்தின் பொது வைப்புக்கள் கணக்கில் 03 மாதங்கள் முதல் 14 மாதங்கள் காலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 2.2.10 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 31 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 யூன் 30 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

மத்திய மாகாண சபையின் இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 134,547,299 தொகையான 15 சொத்து மீதிகளும், ரூபா 1,166,840 தொகையான 16 பொறுப்பு மீதிகளும் தகவல்கள் இல்லாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தன.

### 2.2.11 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அதிகாரச்சட்டங்கள் | |
| (i) 2003 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | அமைச்சர்களின் பதவியணியில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,834,342 தொகையான சம்பளத்திற்குரிய ரூபா 1,166,968 தொகையான சேமலாப நிதியை அரச சேவைகள் சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விசேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு | 04 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 740,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) VII ஆம் அத்தியாயம் | மந்தாரம்நுவர பிரதேச வைத்தியசாலையின் பெண் வைத்தியரொருவர் விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளாமல் வெளிநாடு சென்றிருந்ததுடன் அக்காலப்பகுதிக்காக அவருக்கு சம்பளமும் மேலதிக நேர படிகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | அட்டவணைப்படுத்தப்பட்ட விடுதிகளில் குடியிருப்பதற்கு உரித்துள்ள உத்தியோகத்தரொருவரின் சம்பளத்தில் 10 சதவீதமான வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், பட்டியபள்ளேகம வைத்தியசாலைக்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து 2014 சனவரி முதல் 2015 யூன் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 50,148 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தி | அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றியும் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடொன்றில்லாமலும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 105 உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக நிச்சயிக்கப்பட்ட வீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | XXIV ஆம் அத்தியாயத்தின் 11:9:1 ஆம் பந்தி | கலேவள வலயக் கல்வி அலுவலகத்தில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 675,200 ஆன ஆதனக் கடன் தொடர்பாக உறுதி மற்றும் அடோர்னி அதிகாரத்தைக் கையளிக்கும் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள் கையேடு<br>------------------------------------------------------ | | |
| | (i) | நி.வி.2.1 இல் குறிப்பிடப்பட்ட மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பந்தி (ஈ) | மாகாண சபையின் அனைத்துப் பெறுவனவுகளும் மாகாண சபை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலை யிலிருந்து கிடைக்கும் வருமானம் அந் நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் நலன்புரி நிதியத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 ஒக்தோபர் மாதம் வரை அவ்வாறு சேர்க்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 149,900 ஆக இருந்தது. |
| | (ii) | நி.வி. 41 | மாத்தளை மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களில் 2015 ஆம் ஆண்டில் மாகாண சபை வருமானத்திற்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நி.வி. 54 | சுகாதார திணைக்களத்தில் சேதமடைந்த 20 வாகனங்கள் தொடர்பாக நட்டத்திற்குரிய பணத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | நி.வி. 54.5 மற்றும் 54.6 | ஹட்டன் கல்வி வலயத்திற்குரிய 50 பாடசாலைகளில் 2009 – 2013 வரையான ஆண்டுகளில் இடம்பெற்றுள்ள சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை யொன்றையும் பூரண அறிக்கை யொன்றையும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | நி.வி. 64.2.2(ஆ) | முன்னைய ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யும் போது உரிய அதிகாரமுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான சான்றிதழொன்று இல்லாமல் நுவரெலியா பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 927,654 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (vi) | நி.வி. 85 | | லக்கல பிரதேச செயலகத்தில் ரூபா 891,632 பெறுமதியான 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (vii) | நி.வி. 116.1 | | 06 பிரதேச செயலகங்களில் விளைச்சல்/ வருடாந்த / நீண்டகால குத்தகை, வாகனங்கள் மற்றும் மதுவரி நிலுவை வருமானம் என ரூபா 2,027,178 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நி.வி. 164 | | மத்திய மாகாண சபை செயலாளர் அலுவலகத்தினால் அரச மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அலுவலக உபகரணங்கள் வழங்கப்படா திருக்கையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 385,000 ஆன காசோலையொன்று எழுதப்பட்டு 2016 மார்ச் 31 ஆந் திகதி அளவிலும் பொருள் கிடைக்காததன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ix) | நி.வி.169.1 | | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சான்றுறுதிப்படுத்த வேண்டிய உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், நுவரெலிய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ரூபா 1,229,456 பெறுமதியான 04 உறுதிச் சீட்டுக்களுக்கும் வில்கமுவ, லக்கல மற்றும் உக்குவெல பிரதேச செயலகங்களில் ரூபா 3,945,039 பெறுமதியான 34 உறுதிச்சீட்டுக்களும் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (x) | நி.வி.188.2.2 | | மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தில் செலுத்தப்படாத சம்பள மிகைக் கட்டண கணக்கிற்கு, மாகாண வருமானக் கணக்கிற்கு அல்லது வேறு குறிப்பிடப்பட்ட |

கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 28 உத்தியோகத்தர்களின் ரூபா 779,419 பெறுமதியான செலுத்தப்படாத சம்பளம் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (xi) | நி.வி.261.2.2 | செயல் நிமித்த உபகட்டுநிதி உரிய செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 76 சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்ட ரூபா 1,071,743 ஆன செயல் நிமித்த உபகட்டுநிதி 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலமொன்று கடந்திருந்த போதிலும், தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xii) | நி.வி.365.3 | முற்பண கணக்கு நடவடிக்கைகளுக்கான மூலதனச் செலவினம் அனைத்தும் செலவின தலைப்புக்களில் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட வேண்டிய போதிலும், குருதெனிய கல்வி அபிவிருத்தி கேந்திரத்தின் 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 748,731 ஆன மூலதனச் செலவினம் வணிக முற்பணக் கணக்கிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| (xiii) | நி.வி.369.4 | குருதெனிய கல்வி அபிவிருத்தி கேந்திரத்தின் 552202 ஆம் இலக்க வர்த்த முற்பணக் கணக்கில் ஒதுக்கீட்டு நிதியச் சட்டத்தில் அதிகாரமளிக்கப் பட்டிருந்த ரூபா 4,525,000 தொகையான ஆகக்கூடிய செலவின எல்லை ரூபா 2,055,413 ஆல் விஞ்சியிருந்ததுடன், 550202 ஆம் இலக்க வளங்கள் நிலைய முற்பணக் கணக்கின் உயர் எல்லை அட்டுறு செலவினம் சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 237,666 ஆல் விஞ்சியிருந்தது. |
| (xiv) | நி.வி.471.1 | நிறுவகங்களுக்கு கிடைக்கப்பெறும் அனைத்துப் பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், பட்டிய பள்ளேகம வைத்தியசாலைக்கு 13 பட்டியல்களில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,055,115 பெறுமதியான 115 மருந்து வகைகளும், உடகம அட்டபாகே வைத்தியசாலைக்கு ஒரு மாதிரிப் பட்டியலிலிருந்து கிடைத்த ரூபா 317,109 பெறுமதியான 71 மருந்து வகைகளும் நாவலப்பிட்டிய மாவட்ட |

வைத்தியசாலையால் 15 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 741,154 பெறுமதியான அலுவலக உபகரணங்களும் 23 எழுதுகருவி உருப்படிகளும் இருப்பு பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (xv) | நி.வி.471.2 | கிடைக்கப்பெறும் அனைத்து இருப்பு பெறுவனவுகள் மற்றும் விநியோகம் முறையாக கணக்கிடப்பட வேண்டிய போதிலும், மருத்துவ வழங்கல் பிரிவின் 18 களஞ்சியங்களில் மருந்துப் பொருட்கள், பெறுவனவு மற்றும் வழங்கல் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (xvi) | நி.வி.476 | அனைத்து திணைக்களங்களிலும் வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சுகாதார திணைக்களத்திற்குரிய வைத்தியசாலை களஞ்சியங்கள், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் ஏனைய 233 பிரிவுகளுக்கு இடையே 225 பிரிவுகளில் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (xvii) | நி.வி.477.2.1 | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் மிகை அறவீடுகளை அறவிடுவதற்கு கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நுவரெலியா மாவட்ட வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 37 பாடசாலைகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு 2016 சனவரி மாதம் அளவில் மிகை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள்

----------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 1987 சனவரி 05 ஆந் திகதிய கே/857 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரசின் இல்லங்களுக்காக அறவிடப்படுகின்ற வாடகை வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், வலபனே வலய கல்வி அலுவலகத்திற்குரிய 20 அரச இல்லங்களுக்காக 2011 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட வாடகை தொடர்ந்தும் அறவிடப்பட்டு வந்தது. |
| (ii) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - 06 மாதங்களுக்கு ஒரு முறை அரசின் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நுவரெலிய மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 31 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | 1996 மார்ச் 15 ஆந் திகதிய 8/96 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 10.4 உப பிரிவு | மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் 10 ஆண்டுகளுக்கு குறைந்த சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,404,811 ஆன இடர் கடனுக்காக செல்லுபடியான பிணைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 2014/25 ஆம் இலக்க சுற்றறிக்கை | i. தொடர்ந்து 180 நாட்கள் சேவையை பூர்த்தி செய்திராத 73 ஊழியர்கள் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்வாண்டில் ரூபா 26,553,642 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியின் பின்னர் மாகாண அரச சேவைக்காக தற்காலிக, அமைய, சமயா சமய, ஒப்பந்தம் அல்லது சலுகை அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முழு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியுமான போதிலும் அவ்வாறான அங்கீகார மொன்றில்லாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 14 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (v) | திறைசேரி செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி இயந்திரங்கள் கொள்வனவு முதல் பாதுகாப்பு, பராமரிப்பு, திருத்தங்கள் மற்றும் கைதவிர்ப்பின் போது முறைகேடுகளை தவிர்ப்பதற்காக கணனி இயந்திரங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா வயக் கல்வி அலுவலகத்திற்குரிய 156 பாடசாலைகள் மற்றும் வலய அலுவலகத்திற்குரிய கணனிகள் தொடர்பாக அவ்வாறான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 1979 மே 23 ஆந் திகதிய 999ஆம் இலக்க சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | உணவு வேளையை சிகிச்சையின் பகுதியொன்றாக கருதி அந்த உணவை கண்டிப்பாக நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், சில சந்தர்ப்பங்களில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகின்ற உணவுகள் வழங்கப்படாதிருந்ததுடன் பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட குறைவாகவும் பொருத்தமில்லாத உணவுகளும் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நோய் சிகிச்சை சேவையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் முறையாக நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (vii) | 1999 மார்ச் 17 ஆந் திகதிய சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சனிக்கிழமை நாட்களில் மருத்துவர்களின் வழமையான கடமை நேரம் மு.ப 8.00 மதியம் 12 வரையாக இருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பட்டியபள்ளேகம மாவட்ட வைத்தியசாலையில் சனிக்கிழமை நாட்களில் 10 சந்தர்ப்பங்களில் வெளிநோயாளர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | 2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி/01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | i எவரேனும் மாகாண சபை உறுப்பினரொருவரின் உறுப்புரிமை இல்லாமல் போகும் சந்தர்ப்பத்தில் மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய சகல கடன்தொகையும் ஒரே தடவையில் முழுமையாக அறவிடுவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| | | போதிலும், உறுப்புரிமை இல்லாமலாக்கப்பட்ட 17 மாகாண சபை உறுப்பினர்களுக்குரிய ரூபா 3,709,173 தொகையான கடன் முற்பணங்களை அறவிடுவதற்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அதில் 5 பேரின் கடன் மீதிகள் மாதந்தம் அறவிடப்பட்டு வந்ததுடன், ஏனைய 12 பேரின் கடன் மீதிகள் 03 மாதங்கள் முதல் 111 மாதங்கள் வரையான காலவீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்டன.<br>ii. அடிப்படைச் சம்பளத்தில் அறவிடப்பட முடியுமான 40 சதவீத எல்லையைக் கருத்திற்கொள்ளாமல் 69 சதவீதம் தவணைத் தொகையாக அறவிடப்படும் வகையில் 04 உறுப்பினர்களுக்காக கடன் முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.<br><br>iii. முற்பணங்களை வழங்கும் போது பிணையாளிகளாக வருமான வரி செலுத்தும் நபரொருவரும் உறுப்பினரொருவரும் பிணையாக இருக்க வேண்டிய போதிலும், இரண்டு உறுப்பினர்களை பிணையாளியாக ஏற்றுக்கொண்டு 03 சந்தர்ப்பங்களில் ரூபா 1,350,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் வெளிப்படுத்தல் சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | 2003 மார்ச் 20 ஆந் திகதிய 04/2003 மற்றும் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 04/2008 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள் | தம்புள்ள, வில்கமுவ, நாவுல, அம்பன்கங்கை கோரளை மற்றும் லக்கல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 5 காணி துண்டுகள் அத்துமீறி கைப்பற்றப்பட்டிருந்த போதிலும், அக்காணிகளின் உரித்தை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (x) | 2008 செப்தம்பர் 09 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | வகுப்பொன்றில் மாணவர்களின் எண்ணிக்கையை 40 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கலேவள வலயத்தின் தித்தவெல்கொள்ள கனிஷ்ட வித்தியாலயத்தில் 2 ஆம் தரத்திலிருந்து 4 ஆம் தரம் வரையான வகுப்புகளில் அந்த எல்லையை விஞ்சி 139 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (xi) | 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 13.4 ஆம் பிரிவு | கலேவௗ வலயத்தின் கலேவௗ ஆரம்ப வித்தியாலயத்திற்கு 24 சந்தர்ப்பங்களில் நன்கொடைகள் (கட்டிட நிர்மாணம், உபகரணங்கள் பெறுவனவு) பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xii) | 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய FC/03/03/2014 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு செயலாளரின் சுற்றறிக்கை | மூலதன மானியங்களிலிருந்து நிர்வாகச் செலவினம் மேற்கொள்ள முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளிர், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு மற்றும் அதற்குரிய திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 3,485,113 ஆன நிர்வாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (xiii) | 2015 செப்தம்பர் 30 ஆந் திகதிய 2005/29 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | கலேவௗ வலயத்தின் தித்தவெல்கொள்ள கனிஷ்ட வித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பக் கல்வி பிரிவு பாடசாலை நேரத்திலும் பாடசாலை நேரத்தின் பின்னரும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியமாக இருந்த போதிலும், பாடசாலை நேரத்தின் பின்னர் கல்வி நடவடிக்கைகளுக்காக அல்லது வெளிவாரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத காரணத்தினால் அந்நிலையத்திலிருந்து கூடிய பயன் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (xiv) | 2006 ஆகஸ்ட் 14ஜீபீசீ/02/01/26 ஆம் இலக்க மத்திய மாகாண ஆளுனர் செயலாளரின் சுற்றறிக்கை | அங்கீகரித்த விலையை விஞ்சி நியாயசபை படிகளாக ரூபா 149,450 தொகையும் குணநல கண்காணிப்பு படிகளாக ரூபா 8,200 தொகையும் உணவுபான கட்டணங்களாக ரூபா 86,635 தொகையுமாக மொத்தம் ரூபா 244,285 தொகை மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (xv) | 2003 ஏப்ரல் 11 ஆந் திகதிய சீபீசீ/சீஎஸ்/06/06/02 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் கடிதம | பணம், முத்திரை, ஆதனங்கள், களஞ்சியங்கள் போன்றவற்றிற்கு பொறுப்பினைக் கொண்டிருக்கும் காசேலைகளில் கையொப்பமிடுகின்ற, உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்துதல் போன்ற பொறுப்புக்களை வகிக்கும் 56 பேரிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) ஏனைய

------------

| | |
|---|---|
| கொள்வனவு வழிகாட்டிக் கோவை 3.4.3 | உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் கொள்வனவு கோரலொன்றில்லாமல் காலத்தை நீடிப்பதற்கும் பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனமொன்றுக்கும் ரூபா 4,325,570 தொகை வாடகை அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 05 டிபர்களுக்கும் 08 கெப் வண்டிகளுக்கும் ரூபா 2,950,458 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. வருமான மற்றும் செலவின முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவின விலகல்களுடன்கூடிய பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடியானவை | முரண் சாதகம்/ (பாதகம்) | பாதிடப் பட்டவை | உள்ளபடியானவை | முரண் சாதகம்/ (பாதகம்) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 5,217,954,000 | 5,339,455,572 | 121,501,572 | 4,627,651,000 | 4,693,017,027 | 65,366,027 |
| வரியல்லா வருமானம் | 427,046,000 | 775,598,087 | 348,552,087 | 597,349,000 | 592,421,145 | (4,927,855) |
| அரசாங்க மானியம் | 29,092,595,473 | 27,469,565,814 | (1,623,029,659) | 28,005,885,000 | 21,824,216,131 | (6,181,668,869) |
| மொத்தம் | 34,737,595,473 | 33,584,619,473 | (1,152,976,000) | 33,230,885,000 | 27,109,654,303 | (6,121,230,697) |

## 3.2 செலவினம்

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 23,254,551,734 | 23,076,321,845 | 178,229,889 | 18,063,219,641 | 17,367,281,382 | 695,938,259 |
| ஏனையவை | 5,393,847,079 | 4,921,696,483 | 472,150,596 | 4,781,496,965 | 4,294,165,994 | 487,330,971 |
| மீண்டெழுபவை | 28,648,398,813 | 27,998,018,328 | 650,380,485 | 22,844,716,606 | 21,661,447,376 | 1,183,269,230 |
| மூலதனம் | 4,799,644,002 | 3,787,923,779 | 1,011,720,223 | 6,000,967,683 | 4,565,578,175 | 1,435,389,508 |
| மொத்தம் | 33,448,042,815 | 31,785,942,107 | 1,662,100,708 | 28,845,684,289 | 26,227,025,551 | 2,618,658,738 |

## 3.3 நிலுவை வருமானம்

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் இறுதியிலும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 |
| வரி | 454,225,533 | 174,534,606 | 206,139,354 |
| வரியல்லாத வருமானம் | - | 1,607,951 | 1,961,816 |
| மொத்த நிலுவை வருமானம் | 454,225,533 | 176,142,557 | 208,101,170 |

(ஆ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் 27 பிரதேச செயலகங்களில் நிலுவை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 55,745,491 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மத்திய மாகாண சபையிலிருந்து வேறு மாகாண சபைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த வாகனங்களை இனங்கண்டு அகற்றப்படாததன் காரணமாக அந்நிலுவை சரியானதல்ல அவதானிக்கப்பட்டது.

(இ) மாகாண நிதி விதி 76.1.7 இன் பிரகாரம் நீண்டகால குத்தகையாளர்கள் உரிய திகதியில் குத்தகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத காரணத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய 10 சதவீத தண்டப்பணமான ரூபா 638,600 தொகை கலேவெள பிரதேச செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 25,670,888,448 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 20,941,587,379 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,729,301,069 தொகையான வீழ்ச்சியினைக் காண்பித்தது.

## 5. அதிகாரசபைக் கணக்கு

மாகாண சபையின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அதிகாரசபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குரிய கணக்குகள் நிதிய கணக்கு மூலம் மேவுகை செய்யப்படவில்லையென கணக்கு கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட 01 ஆம் இலக்க கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக ரூபா 357,372,007 ஆன மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 297,297,514 மூலதன செலவினமாக மொத்தம் ரூபா 654,669,521 தொகை 570 ஆம் இலக்க தலைப்பின் கீழ் மாகாண நிதியக் கணக்கின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

#### 6.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைத்த நிதிஏற்பாடு மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | மூலம் | பெறப்பட்ட நிதிஏற்பாடு | செலவினம் | பயன்பாடு பற்றா/(மிகை) |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| i. | திட்டவட்டமான மானியம் | 380,000,000 | 299,978,803 | 80,021,197 |
| ii. | மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் | 1,510,000,000 | 1,003,204,099 | 506,795,901 |
| iii. | ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) | 13,134,550 | 15,564,699 | (2,430,149) |
| iv. | மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் | 1,254,689,125 | 1,255,045,274 | (356,149) |
| v. | பாகிஸ்தான் நன்கொடை | 2,174,025 | 2,174,024 | 1 |
| vi. | ஆரம்ப சமூக சேவைகள் மேம்படுத்தல் செயற்திட்டம் | 27,700,000 | 27,416,052 | 283,948 |
| vii. | ஏனைய மானியங்கள் | | | |
| | உலக வங்கி மானியம் - கல்வி | 313,519,194 | 484,019,779 | 170,500,585 |
| | - சுகாதாரம் | 355,000,000 | 527,480,513 | (172,480,513) |
| viii. | வரிசை அமைச்சு மற்றும் நிறுவன மானியம் | 71,237,919 | 71,237,919 | - |
| | மொத்தம் | **3,927,454,813** | **3,686,121,162** | (241,333,651) |

#### 6.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் நடைமுறை வேலைகளுக்காக ரூபா 1,770.78 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய 6159 செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வேலை முன்மொழிவுகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | | புதிய வேலை | நடைமுறை வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வேலைத் திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா மில்லியன் |
| i. | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 5,711 | 11 | 5,722 | 1,668.95 |
| ii. | 50% ஐ விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 270 | 05 | 275 | 23.85 |
| iii. | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 23 | 69 | 92 | 72.**10** |
| iv. | ஆரம்பிக்கப்படாத | 67 | - | 67 | 3.18 |
| v. | சர்ச்சைக்குரிய/ பிரச்சினைக்குரிய நிலைமையின் கீழான | 3 | - | 3 | 2.70 |
| மொத்தம் | | 6,074 | 85 | 6,159 | 1,770.78 |

**6.1.3 பரீட்சைப் பெறுபேறுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக நாடு முழுவதும் தோற்றிய 333,672 மாணவர்களில் மத்திய மாகாண சபைக்குரிய 15 வலயங்களின் கீழ் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 43,000 ஆக இருந்தது. அதில் வெட்டுப்புள்ளியை விஞ்சி சித்தயடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2,834 ஆக இருந்ததுடன், அது பரீட்சைக்காக தோற்றிய மத்திய மாகாண மாணவர்களில் 6.59 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டில் இப்பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 43,595 ஆக இருந்ததுடன், சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 4,891 ஆன 11.22 சதவீதமாக இருந்தது. இதன் பிரகாரம் புலமைப்பரிசில் பெறுபேறுகள் முன்னைய ஆண்டுடன், ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 4.63 சதவீத பின்னடைவொன்றாக இருந்தது.

(ஆ) புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இடையே 70 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றுக்கொண்ட மாணவர்களின் சதவீதம் 28.6 ஆக இருந்ததுடன், வலயமாக கருதப்பட்ட நுவரெலிய வலயத்தில் இச்சதவீதம் 41.58 ஆக இருந்தது. கண்டி தவிர ஏனைய அனைத்து வலயங்களிலும் இது 20 சதவீதத்தை விஞ்சியிருந்தது. இதன் பிரகாரம் 70 இற்கு குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 11,538 ஆன எண்ணிக்கையானோர் 06 ஆந் தரத்தில் கற்பதற்கு தேவையான அடைவு மட்டத்தை பெற்றிருக்கவில்லை.

(இ) மத்திய மாகாணத்தின் 15 வலயங்களில் க.பொ.த.(சா.த) பரீட்சை சித்தியடைதல் சதவீதத்தில் கண்டி வலயம் மாத்திரமே 75 சதவீதத்தை மிகைத்திருந்ததுடன் வில்கமுவ, நுவரெலியா, கம்பொள மற்றும் ஹட்டன் வலயங்களில் முறையே 45.03, 43.26, 40.18 மற்றும் 40.04 சதவீதமாக இருந்தன. எஞ்சிய 15 வலயங்களில் சித்தியின்மை சதவீதம் 25 சதவீதத்தை விஞ்சியிருந்தது. மேலும் 1,133 மாணவர்கள் அதாவது 3.27 சதவீதம் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த) பரீட்சைக்காக மத்திய மாகாணத்திலிருந்து தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 34652 ஆக இருந்ததுடன், அதில் க.பொ.த.(உ.த) பரீட்சைக்காக தகைமை பெற்றோரின் எண்ணிக்கை 23209 அதாவது 66.98 சதவீதமாகும். நாட்டின் ஒட்டுமொத்த பெறுபேற்றில் மத்திய மாகாணத்திற்கு 05 ஆவது இடம் கிடைக்கப்பெற்றிருந்தது.

(உ) க.பொ.த.(உ.த) பரீட்சைக்காக மத்திய மாகாணத்திலிருந்து தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 26046 பேரில் பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெற்றோரின் எண்ணிக்கை 15967 அல்லது 59.38 சதவீதமாக இருந்தது.

## 6.14 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அந்தத் திணைக்களம் மீளாய்வாண்டின் போது ரூபா 20,332,587,037 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 16,442,083,231 தொகை மாகாண சபை செலவின விடயத்தின் கீழும் ரூபா 3,636,277,649 தொகை மத்திய அரசின் நிதிஏற்பாட்டின் கீழும் செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அறிவுசார் பொருளியல் நோக்கிய மனிதவள மூலதன அடிப்படையாக பாடசாலை முறைமை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் (TSEP) இன் கீழ் ரூபா 222,311,356 தொகையும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (ESDP) ரூபா 20,621,976 தொகையும் யுனிசெப் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 10,439,611 தொகையும் நனோதா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 134,599 தொகையும் பாகிஸ்தான் மானியங்களின் கீழ் ரூபா 718,615 தொகையுமாக செலவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்காக விடயரீதியான பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு தேவையான செயற்பாடுகள் இனங்காணப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிய மனிதவள மூலதன அடிப்படையாக பாடசாலை முறைமை மாற்றும் செயற்திட்டத்திற்கு கல்வி அபிவிருத்தி உலக வங்கி நிதிஏற்பாட்டின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்காக வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 492,070,000 தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 29.53 சதவீதமான ரூபா 145,349,047 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட தொகைக்குரிய பௌதீக செயலாற்றல் அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தம்புள்ள பிரதேச செயலகத்தினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் பயிற்சி நிறுவனமொன்றுக்கு வணிக நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணியின் குத்தகைக் காலம் 2010 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிக்க அல்லது காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குத்தகைப் பணம் நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) தம்புள்ள பிரதேச செயலகத்தினால் எட்டவராஹேனயில் அமைந்துள்ள நிறுவனமொன்றுக்காக ஓராண்டிற்கு ரூபா 17,100 வீதம் 30 ஆண்டுகள் நீண்டகால குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் குத்தகைக்கு வழங்கியிருந்த காணியின் குத்தகைக் காலம் 2016 மார்ச் 25 ஆந் திகதி முடிவடைய இருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டின் பின்னர் எவ்வித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வில்கமுவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய ஹெட்டிபொல புதிய வியாபாரிகளுக்கும் 17 குடியிருப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த காணியிலிருந்து எவ்வித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2001 ஆம் ஆண்டில் இக் காணி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 15 ஆண்டு காலப்பகுதியில் அதற்குரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பள்ளேபொல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அரசின் 09 காணித் துண்டுகள் விவசாயம், வர்த்தகம் தங்குமிடமாக நீண்டகாலமாக குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) சுகாதார திணைக்களத்தினால் ரூபா 124,700 பெறுமதியான உபகரணமொன்று கட்டளையிடப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவ் உபகரணத்தை வழங்குவதற்கு உரிய வழங்குனர் தவறியிருந்தார்.

(ஊ) டிகிரி செவன சிறுவர் இல்லத்தில் 45 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட அளவிலான சிறுவர்கள் தங்கியிருந்தும் அவர்களுக்காக 10 கட்டில்களும் 31 தொட்டில்களும் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தமையால் சிறுவர்களுக்காக போதியளவு வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) மத்திய மாகாண சபையின் நிர்வாகக் கட்டிடத் தொகுதிக்கு 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்துவதற்காக 2013 சனவரி 28 ஆந் திகதி இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தி 02 ஆண்டுகளும் 04 மாதங்களும் கடந்திருந்த போதிலும், அதில் ரூபா 14,723,764 பெறுமதியான மின்பிறப்பாக்கியொன்று வழங்கி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு 2015 திசெம்பர் 12 ஆந் திகதி கிடைத்த ரூபா 4,495,000 பெறுமதியான 29 INFUTION PUMP உரிய மாதிரிகளுடன் இணங்கவில்லையென தெரிவித்து 2016 சனவரி 12 ஆந் திகதி விநியோக நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2016 யூலை வரையிலும் மாதிரிகளுக்கு இணங்க உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மத்திய மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 154,790 ஆன நிலுவைக் கடன் மீதியை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2013 யூன் 02 ஆந் திகதி உறுப்புரிமையை இராஜினமாச் செய்வதற்கான கடிதத்தை ஏற்றுக்கொண்டமை காரணமாக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக்கடன் தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,937 ஆக இருந்தது.

(ஓ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 26 வாகனங்கள் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், அவற்றின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 14 நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தரொருவருக்கும் யுனிசெப் செயற்திட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தாமல் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டும் ஒரு முறை அந்த உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கில்கள் வழங்கப்பட்டிருந்தன.

(க்) மாத்தளை வடக்கு ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2015 ஆம் ஆண்டிற்காக கோரப்பட்ட உலர் மருந்து வகைகளில் 12 வகை மருந்துகள் முழுமையாக கிடைக்கப் பெறாமல் இருந்ததுடன், கிடைக்கப்பெற்ற உலர் மருந்து வகைகளில் 10 வகையின் பெறுவனவு கட்டளைகளின் சதவீதமாக 13 சதவீதம் முதல் 45 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(கா) மாகாண சபை அமைச்சர்களுக்காக வழங்கப்பட்டிருந்த மடிக்கணணி இயந்திரங்களை அவர்கள் மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிச்செல்லும் போது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2016 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்படாத 26 மடிக் கணணிகளின் பெறுமதி ரூபா 2,789,100 ஆக இருந்தது.

(கி) வலபனே வலய கல்வி அலுவலகத்திற்குரிய 09 விடுதிகளுக்காக வீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 06 மாதங்கள் மற்றும் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட ரூபா 3,427,103 பெறுமதியான நட்டங்கள் மற்றும் தேசங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(கு) கொத்மலே ஊழியர் கல்வி வலயத்தில் 85 பாடசாலைகளில் 4702 சிறுவர் மேசைகள் 5200 சிறுவர் கதிரைகள், 517 ஆசிரியர் மேசைகள் மற்றும் 640 ஆசிரியர் கதிரைகள் பற்றாக்குறையாக காணப்பட்டன.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரத்தோட்டை பிரதேச செயலக சமுர்த்தி மஹா சங்கத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணியில் நடாத்திச் செல்லப்பட்ட 3 சமுர்த்தி சங்கங்களில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்குரிய ரூபா 162,600 குத்தகை பணத்தையும் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 8,130 ஆன தண்டப் பணத்தையும் 2016 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் மாகாண முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 314,310 பெறுமதியான 101 வகை பொருள் உருப்படிகள் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வில்கமுவ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 04 வலய கல்வி அலுவலகங்களின் கீழ் காணப்படும் பாடசாலைகளுக்குரிய 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆண்டு வரை கிடைத்த 193 முறைப்பாடுகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கு புலனாய்வு சபை நியமிக்கப்பட்டு 04 மாதங்கள் முதல் 04 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் 2016 பெப்ரவரி வரையிலும் புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தம்புள்ள மற்றும் பள்ளேபொள பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள அரச காணிகள், சுவர்ண பூமி மற்றும் ஜய பூமி உரித்து மூலம் பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை பிரகாரம் அக் காணியை விற்பனை செய்ய, மாற்றுவதற்கு அல்லது உப குத்தகைக்கு வழங்க உரிமையாளருக்கு எவ்வித உரித்தும் காணப்படாத போதிலும், பிரதேச செயலகத்திற்கு அறிவிக்காமல் தொலைபேசி கோபுரங்கள் நிர்மாணிப்பதற்காக தனியார் தொலைபேசி கம்பனியொன்றுக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) கலேவள கல்வி வலயத்திற்குரிய 85 பாடசாலைக் காணிகள் சிக்கலில்லாத எல்லை நிர்ணயிக்கப்படாதிருந்தமையால் பாடசாலை காணிகளில் அத்துமீறிய நிர்மாணம் மற்றும் அத்துமீறிய வீதி நிர்மாணங்கள் போன்ற பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருந்தன.

(ஊ) மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் தொலம்புகொல்ல உயர் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மேல் மாடியை புனரமைப்பதற்காக விளையாட்டு, இளைஞர் விவகார மகளிர் அலுவல்கள், கிராமிய அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சினால் 2015 நவம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 508,635 வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 205,299 தொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டு கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்திருக்கப்பட்டிருந்தது.

(எ) வலபனை மற்றும் நுவரெலியா வலயங்களில் 1994 முதல் 2014 வரை நியமனங்கள் வழங்கப்பட்ட 48 ஆசிரியர்களின் விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், விதவை மற்றும் அநாதை ஓய்வூதிய இலக்கமொன்றினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உக்குவல மற்றும் தம்புள்ள பிரதேச செயலகம் அதிகாரப் பிரதேசங்களில் அரச காணிகளில் பயன்பெறுவோருக்கு வழங்குவதற்காக முறையே 12 மற்றும் 198 சுவர்ண பூமி மற்றும் ஜய பூமி உறுதிப் பத்திரங்கள் 05 ஆண்டுகள் முதல் 33 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 279,559 ஆன பெறுமதி சேர் வரித் தொகை 25 மாத காலமாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஒ) புஸ்ஸல்லாவ மாவட்ட வைத்தியசாலையால் 2015 ஆம் ஆண்டில் மதிப்பீட்டில் கோரப்பட்டிருந்த ரூபா 1,046,595 பெறுமதியான 19 வகை மருந்து வகைகள் கிடைக்கப் பெறாமல் இருந்ததுடன் கண்டி பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் ரூபா 91,312 பெறுமதியான 17 மருந்து வகைகள் மிகையாக காணப்பட்டமை.

(ஓ) அகில இலங்கைப் பாடசாலை விளையாட்டு போட்டிகளுக்காக சமூகமளிக்கும் பாடசாலைகளின் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு 2400 விளையாட்டு ஆடை தொகுதிகளை வழங்குவதற்கு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு ரூபா 3,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களுக்காக ரூபா 2,925,000 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு 3,000 விளையாட்டு ஆடை தொகுதிகள் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்து 66 மற்றும் 89 நாட்கள் கடந்த பின்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட 179 ஆடைத்தொகுதிகள் 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

## 6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண விவசாய அமைச்சின் அவசர அபிவிருத்தி தேவைப்பாடாக கருதி மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி அவசர அபிவிருத்தி தேவைப்பாடுகளாக கருத முடியாத ரூபா 985,680 தொகையான 02 இணைப் பிரதி இயந்திரங்களும் ரூபா 141,525 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் இணைப் பிரதி இயந்திரமொன்று கல்வி அலுவலகமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) முறையான பெறுகைச் செயற்பாட்டிற்குப் புறம்பாக அமைச்சரவை பத்திரமொன்று மூலம் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரி சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் விலை விபரங்களுடன் ஒப்பிட்டு செயற்பாடுகள் எவ்வித வேறுபாடொன்றில்லாமல் வருடாந்த செலவினத்தில் ரூபா 558,000 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(இ) மஹாவலியிலிருந்து கையேற்கப்பட்ட சொத்தொன்றாக கருதப்படாத குண்டசாலை பிரதேச சபைக்குரிய ஜனசவியகம விளையாட்டரங்கு அபிவிருத்தி செய்தல் மற்றும் நடை பாதை அமைப்பதற்காக 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் சொத்துக்களை பராமரித்தல் செலவின விடயத்தின் கீழ் ரூபா 7,125,784 தொகையும் துரித பொருளாதார அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 3,290,127 தொகையுமாக ரூபா 10,415,911 செலவிடப்பட்டிருந்தது. துரித பொருளாதார அபிவிருத்தி செயற்திட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து இவ் விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு இணங்காமையால் இணக்கப்பாட்டை வழங்க முடியாதென அறிவித்திருந்தும் இச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6.5 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹட்டன் கல்வி வலயத்திற்குரிய பாடசாலையொன்றின் ஆசிரியரொருவரால் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கையையும் உரிய ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரால் ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 04 ஆந் திகதி அளவிலும் அவ்வறிக்கை மாகாண வலய பணிப்பாளருக்கு வழங்கப்படாதிருந்ததுடன் தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.2 பிரிவின் பிரகாரம் அவ்வுத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல் 2015 மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை ரூபா 344,666 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஹட்டன் சீடா நிலையத்தில் 407 சந்தர்ப்பங்களின் போது முறையற்ற விதத்தில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,631,800 தொகை அந்த நிலையத்திற்கு பொறுப்பான கூட்டிணைப்பு உத்தியோகத்தரால் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்தது.

(இ) கட்டுகஸ்தோட்ட வலய அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டுள்ள ஆங்கில மொழிப் பாடத்திற்கு பொறுப்பான கடமை மேவுகையில் ஈடுபட்டிருக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர் 2015 யூலை மாதம் சேவைக்கு அறிக்கையிடப்படாமல் அனுமதியொன்றில்லாமல் தனியார் பாடசாலையொன்றில் முழு நேர சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் கட்டுகஸ்தோட்ட வலய அலுவலகத்திலிருந்து அம்மாதத்திற்கு ரூபா 51,514 ஆன சம்பளம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அந்த உத்தியோகத்தர் 24 சந்தர்ப்பங்களில் வெளிக் கடைமைகளில் ஈடுபட்டிருந்தாக குறிப்பிட்ட இடங்களில் சேவைக்கு சமூகமளிக்காதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 6.6 செயற்பாடற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 05 நிலையங்களில் நெய்யப்பட்டு காணப்பட்ட ரூபா 200,735 பெறுமதியான வோப் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பூர்த்தி செய்யப்படாமல்

இருந்ததுடன், 09 நிலையங்களில் ரூபா 223,499 பெறுமதியான 265 கிலோ கிராம் நூல் 2 ஆண்டுகளுக்கும் 8 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் ஹிந்தகல புடவைக் கைத்தொழில் நிலையத்தின் நூலை வர்ணமாக்குவதற்காக மூன்று நுட்பவியலாளர்கள் இருந்ததுடன் நூலை நிறமாக்குதல் மாத்திரம் இங்கு இடம் பெற்றிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது இந் நிலையத்திற்கு கிடைத்த 290 கி.கி நூலை வர்ணமாக்குவதற்கு 28 நாட்கள் எடுத்திருந்ததுடன், அவர்களின் விளைவற்ற காலம் 171 நாட்களாக இருந்தது.

(இ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 09 நிலையங்களில் 02 தையல் இயந்திரங்கள், 13 வைன்டிங் இயந்திரங்கள், 27 பின்னும் இயந்திரங்கள் மற்றும் நூல் தயாரிக்கும் இயந்திரங்கள் உட்பட 45 இயந்திரங்கள் விளைவற்று காணப்பட்டன.

(ஈ) நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 19 வாகனங்கள் 08 ஆண்டு காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு அலுவலக வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 35 அரச இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) மின்சாரம் இல்லாத பிரதேசங்களில் செயற்படுத்துவதற்காக கிராமிய சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 பெப்ரவரி மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த மின் பிறப்பாக்கி இயந்திரம் 2 வருட காலமாக விளைவற்றுக் அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தது.

(எ) 2013 ஆம் ஆண்டிலிருந்து மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய பராமரிப்பு பிரிவு செயற்படாதிருந்ததுடன், இதன் காரணமாக பராமரிப்பு பிரிவின் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நுவரெலியா வலயத்தின் 156 பாடசாலைகளில் குணநல உள்ளீட்டிற்கான முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 6,109,719 தொகை 2015 சனவரி 01 வரையிலும் செலவிடப்படாமல் எஞ்சியிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,959,200 தொகை உட்பட ரூபா 13,068,919 ஆன மொத்த தொகையில் ஆண்டினுள் ரூபா 2,826,284 செலவிடப்பட்டிருந்தமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 10,242,635 தொகை விளைவற்று காணப்பட்டன.

(ஐ) மீளாய்வாண்டில் நுவரெலியா வலயத்தில் 82 பாடசாலைகளுக்காக குணநல உள்ளீட்டிற்கான வழங்கப்பட்டிருந்த பணத்தில் எவ்வித பணத்தையும் ஆண்டின் போது செலவிடப்படாமல் இருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு விளைவற்றுக் காணப்பட்ட பணம் ரூபா 7,404,956 ஆக இருந்தது.

(ஒ) 2015 ஆம் ஆண்டில் வலபனே வலயத்தின் 87 பாடசாலைகளுக்கான ரூபா 3,369,400 குண நல உள்ளீடாக வழங்கப்பட்டிருந்ததுடன் பாடசாலைகளால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் 08 பாடசாலைக்குரிய ரூபா 423,354 தொகை பயன்படுத்தப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஓ) வலபனே கல்வி வலயத்தின் 3 பாடசாலைகள் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் மூடப்பட்டிருந்ததுடன், 2016 மார்ச் வரையில் அப் பாடசாலைகள் தொடர்பாக முறையான செயற்பாடு ஒன்றின்மையால் பாடசாலை கட்டிடங்கள் சேதமடைந்தவாறு காணப்படுகின்றன.

(ஔ) வலபனே கல்வி வலயத்தில் ஜீப் வண்டியொன்று வருடக் கணக்காக பயன்படுத்தப்படாமல் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(க்) வலபனே கல்வி வலயத்திற்குரிய 09 ஆசிரிய விடுதிகள் 07 தனியார் விடுதிகள் மற்றும் 02 அதிபர் விடுதிகள் என்பவற்றில் எந்தவொரு ஆசிரியரும் குடியிருக்காமையால் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் 07 ஆசிரியர் விடுதிகள் மற்றும் 05 அதிபர் விடுதிகள் என்பன குடியிருப்பதற்கு முடியாதவாறு நிலைமையில் பழுதடைந்த நிலைமையில் காணப்பட்டன.

(க) அங்கும்புற பிரதேச வைத்தியசாலைக்குரிய 04 விடுதிகளின் கூரைகள் பழுதடைந்த நிலைமையில் காணப்பட்டமையால் நீண்டகாலமாக எந்தவொரு உத்தியோகத்தரினதும் பயன்பாட்டிற்காக எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 6.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலை அடிப்படை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை அடிப்படை ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சி செயலமர்வுகளுக்காக ஆசிரியர் பயிற்சிக்கு நேரடியாக தொடர்புடைய முன் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களை பங்களிப்புச் செய்வதற்குப் பதிலாக அச் செயற்திட்டம் தொடர்பான ஏனைய 23 உத்தியோகத்தர்கள் சமூகமளித்து அதற்காக ரூபா 24,230,725 தொகை செயற்திட்ட (TSEP) நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று அறைகளுடன் கூடிய 3 வீடுகள் உறுப்பினர்களின் தங்குமிட வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கையில் 2016 வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றும் விவாதம் இடம் பெற்ற தினத்தில் உறுப்பினர்களின் தங்குமிட வசதிகளுக்காக தனியார் ஹொட்டலொன்றுக்கு ரூபா 134,000 தொகையும் வாழ்த்தட்டைகளை அச்சிடுவதற்காக ரூபா 19,000 தொகையும் மத்திய மாகாண சபை செயலாளர் அலுவலகத்தினாலும் வாழ்த்து அட்டைகள், நினைவுச் சின்னம் மற்றும் அட்ட பிளிகர கொள்வனவிற்காக தலைமை அமைச்சினால் ரூபா 425,190 உமாக ரூபா 578,190 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 6.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெரவட்ஸ் ரோயல் ஆரம்ப பாடசாலையின் அதிபரினால் 2014 ஆம் ஆண்டில் முதலாவது வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது ஒரு மாணவரிடம் இருந்து ரூபா 12,500 வீதம் ரூபா 1,594,600 அறவிடப்பட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்க கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதிபரால் பாடசாலைகளின் தேவைகளாக குறிப்பிடப்பட்டு அவ்வப்போது அப் பணத்தை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செலவிடப்பட்ட முறையை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 2015 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது அமைச்சு செயலாளரின் அங்கீகாரமொன்று இல்லமல் ரூபா 751,600 தொகை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் கணக்கிற்கு சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சினால் ஆளுனரின் அங்கீகாரமொன்று இல்லாமல் மத்திய மாகாண சபை அமைச்சரவை தீர்மானமொன்று மூலம் 07 மேற்பார்வை உறுப்பினர்களுக்காக மாதமொன்றுக்கு கூடியது ரூபா 12,000 இற்கு உட்பட்டு 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,013,220 படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**6.9 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகாதார அமைச்சின் அனர்த்த முன் தயார்படுத்தல் பிரிவின் மூலம் 2014 திசெம்பர் 29 ஆந் திகதி சுகாதார திணைக்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 500,000 ஆன முற்பணத் தொகை உரிய நடவடிக்கைகளுக்காக செலவிடப்படாமல் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு பின்னர் ரூபா 499,952 தொகைக்கு மழை அங்கிகள், மேவுகை சப்பாத்துக்கள் அவற்றை பொதி செய்வதற்கும் பைகளும் LED மின் சூள்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) திட்டவட்டமான மானியத்தின் கீழ் மாகாண சபை உறுப்பினர்கள் அபிவிருத்தி முன்மொழிவிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் அந் நோக்கத்திற்கு முரணாக 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 175,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மத்திய மாகாண அதிபர்களால் 2011 ஆகஸ்ட் 30 ஆந் திகதி முதல் செப்தம்பர் 30 ஆந் திகதி வரை இடைப்பட்ட காலப்பகுதியில் மாகாண பரீட்சைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 797,360 தொகை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் ஏப்ரல் வரை 3 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் இத் தொகையில் நோக்கத்திற்கு முரணாக மூலதன தன்மையிலான பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 791,110 செலவிடப்பட்டிருந்தது.

**6.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் உள்ளக மின் முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக 3 கட்டங்களின் ரூபா 10,746,752 செலவிடப்பட்டிருந்த பின்னர் அதன் பராமரிப்பு காலம் கடப்பதற்கு முன்னர் நவீனமயப்படுத்தப்பட்ட மின் முறைமையின் தொழில்நுட்ப தவறொன்று ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக திணைக்களத்திற்குரிய நிழற்பட பிரதி அச்சிட்டு இயந்திரங்கள் போன்ற பெறுமதியான உபகரண அலகுகள் 38 செயலற்று சேதத்திற்கு உட்பட்டிருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் வாடகையை அறவிடப்படாமையால் தம்புள்ள பிரதேச செயலகத்தின் மூலம் தனியார் கம்பனியொன்றுக்கு 2001 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த காணியொன்றிலிருந்து ரூபா 5,053,630 வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

(இ) கலேவள வலயத்தின் பெல்வெஹர கனிஷ்ட வித்தியாலயத்தின் 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கணனி திருட்டு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 99,781 தொகை 2015 திசெம்பர் மாதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கலேவள வலயத்தின் 03 பாடசாலைகளில் இடம்பெற்ற நட்டங்கள் தொடர்பாக 2012 மே மாதத்தில் ஓய்வு பெற்ற அதிபரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டண தொகை ரூபா 614,170 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நுவரெலிய பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் ரூபா 2,777,125 பெறுமதியான காலாவதியான 242 மருந்து உருப்படிகள் காணப்பட்டன.

(ஊ) நுவரெலிய பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் காணப்பட்ட ரூபா 5,709,061 பெறுமதியான குறைந்த தரத்துடன் கூடிய மருந்து இருப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நுவரெலிய பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவினால் கழிவுக் கால எல்லைக்குள் கொடுப்பனவு செய்யப்படாமை மற்றும் கழிவினை கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக வீதவரிக் கொடுப்பனவின் போது ரூபா 106,292 ஆன நட்டடொன்று இடம்பெற்றிருந்தது.

(ஏ) மாத்தளை மாவட்ட மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்திலும் வைத்தியசாலை களஞ்சியங்களிலும் 2011-2014 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலவி வரும் முறை ரூபா 4,743,459 மற்றும் ரூபா 5,664,627 என மொத்தம் ரூபா 10,408,086 பெறுமதியான தரமில்லாத மருந்துகள் அதிகளவில் காணப்பட்டன.

(ஐ) புஸ்ஸல்லாவ, பட்டியயபள்ளேகம மற்றும் உடகம அடபாகே ஆகிய பிரதேச சைத்தியசாலைகளில் ரூபா 77,270 பெறுமதியான 22 மருந்து வகைகள் காலாவதியாக இருந்தன.

(ஒ) கண்டி பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவின் ரூபா 4,021,310 பெறுமதியான 80 மருந்து வகைகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்டது.

(ஓ) வலப்பனே கல்வி அலுவலகத்தின் பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை சேவையிலிருந்து வரிதாகிச் சென்ற 03 ஆசிரியர்களுக்காக சேவையை வரிதாக்கிச் சென்ற பின்னரும் ரூபா 64,661 தொகையான சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பிரதான விலை மதிப்பாளரின் 2014.07.16 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நுவரெலியா யுனிக்விட்டி என்ற பெயரிலான அரசின் விடுதியுடன் காணி 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 14,000,000 என மற்றும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 23,000,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 5,600,000 ஆக இருந்த போதிலும் அதற்காக ரூபா 162,000 சிக்கன வாடகை அறவிடப்பட்டிருந்தது. முறையான அடிப்படையொன்றில்லாமல் அறவிடப்பட்டிருந்த சிக்கன வாடகை காரணமாக மத்திய மாகாண காணி திணைக்களத்திற்கு ரூபா 5,438,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(க்) குருதெனியா கல்வி அபிவிருத்தி கேந்திரத்தின் பிரதான கேட்போர் கூடத்தின் மேடைக்கு காபட் இடுவதற்காக 783 சதுர அடிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 712 சதுர அடியே நிறைவேற்றப்பட்டிருந்தமையால் 71 சதுர அடிக்காக ரூபா 55,593 தொகையும், சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளும் போது உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்தமையால் ரூபா 9,000 மாக மொத்தம் ரூபா 64,593 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(க) உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு 2016 யூன் 08 ஆந் திகதி கிடைத்த ரூபா 1,524,000 பெறுமதியான 254 இரத்த சுத்திகரிப்பு கலன்கள் 42 வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர், அவற்றின் அளவீடுகள் தவறாக காண்பிக்கப்படுவதால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தன.

(கா) நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,200,000 பெறுமதியான Blood Gasanalaizer இயந்திரம் உத்தரவாத காலம் முடிவடைவதற்கு முன்னர் அதாவது 03 மாத காலத்தின் பின்னர் செயலாற்று காணப்பட்டது.

**6.11 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 வருடாந்த மதிப்பீட்டில் விவசாய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,000,000 ஆன நிதி ஏற்பாடுகளுக்குரிய பணம் பலுடுவாவ வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை 2016 எப்ரல் 26 ஆந் திகதி அளவிலும் மாகாண அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயத் திணைக்களத்தின் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தினால் கொத்மலே தொரகல கிராமத்தை மண் பாதுகாப்பு மாதிரிக் கிராமமொன்றாக அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 17.85 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் நீர் மூடும் முறைமை, விவசாய வீதிகள், மழைநீர் தேங்கும் இடங்கள், நுண் நீர்ப்பாசன முறைமை, பழத் தோட்டங்கள், மலர்கள் மற்றும் காளான் செய்கை மண் பாதுகாப்பு தந்திரோபாயங்கள் போன்ற உள்ளடக்கப்பட்ட திட்டமொன்று 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது மாகாண விவசாய திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முழுத் திட்டத்தையும் செயற்படுத்துவதற்காக காலம் போதியதாக இல்லாமையால் மாகாண விவசாய திணைக்களத்தினால் அதில் ரூபா 7.5 மில்லியனால் செயற்பாடுகளை மாத்திரம் உள்ளடக்கி புதிய திட்டமொன்றை அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட காரணத்தினால் மாகாணத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த ரூபா 10.35 மில்லியனான இயற்கை வளங்கள் பாதுகாப்பு செயற்பாடுகள் இழக்கப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 2,263,059 தொகையான 07 செயற்பாடுகள் 2016 மார்ச் 09 ஆந் திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மல்தெனிய மாவட்ட வைத்தியசாலையின் மனநோய் சுகாதார மருத்துவ பிரிவினை திருத்தியமைப்பதற்காக ரூபா 1,808,405 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் வடிகான் முறைமையில் தவறொன்று காரணமாக மழை காலங்களில் வார்ட் நீரில் மூழ்குவதால் அது குறைபயன்பாட்டிற்குட்பட்டு வந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 2,057,560 செலவிடப்பட்டு மல்தெனிய மாவட்ட வைத்தியசாலைக்காக நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவின் சுவர் கொங்கிரீட் தூண்களிலிருந்து வெடிப்பேற்பட்டிருந்ததுடன் மேல் மாடிக்கு நுழைவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள படிக்கற்கள் உரிய தரத்தில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6.12 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபை உறுப்பினர் நிதி ஏற்பாட்டின் கீழ் 07 செயற்திட்டங்களுக்காக ரத்தொட்டை பிரதேச செயலகத்திற்கு கிடைத்த ரூபா 348,500 நிதி ஏற்பாடு, வில்கமுவ பிரதேச செயலகத்தின் 05 செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 89,000 நிதி ஏற்பாடு மற்றும் தம்புள்ள பிரதேச செயலகத்திற்கு 12 செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 293,000 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் மாணணகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் யட்டவத்த பிரதேச செயலகத்தினால் 05 மின்சார மற்றும் நீர் செயற்திட்டங்களுக்கான ரூபா 125,678 மற்றும் உக்குவல பிரதேச செயலகத்திற்கு 02 மின் நீடிப்புக்களை வழங்குவதற்காக ரூபா 122,928 உமாக மொத்தம் ரூபா 248,606 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி வரையிலும் மின் மற்றும் நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடுநுவர வெரலவத்த பிரதேசத்தின் பெண் பிள்ளைகளுக்காக தடுப்பு முகாமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 10,139,232 செலவிடப்பட்டிருந்ததுடன், கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட இடத்திற்கு புறம்பாகவும் மண் மாதிரி பரீட்சிக்கப்படாமல் பள்ளமான மற்றும் சகதியுடனான வயல் வெளிக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் கட்டிடமும் பாதுகாப்பு மதிலும் வெடித்து கீழிறங்கி பாதுகாப்பற்ற நிலைமையொன்றுக்கு உட்பட்டிருந்தது. பரிந்துரைக்கப்பட்ட இடத்திலிருந்து விலகியமையால் பாதுகாப்பு மதிலை நிர்மாணிப்பதற்கு மேலதிகமாக செலவிடப்பட்ட ரூபா 1,369,295 தொகையும் மேற்குறித்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக இக் கட்டிடம் தடுப்பு நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாய அமைச்சினால் மீளாய்வாண்டினுள் செயற்படுத்தவதற்காக கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயத்தின் கூட்டுத்தொகை ரூபா 16.64 மில்லியன் கூட்டுத்தொகையான 11 நீர்ப்பாசன செயறதிட்டங்கள், நன்னீர் மீன்பிடி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 2,050,000 தொகையான 05 உப செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) விவசாய அமைச்சினால் மீளாய்வாண்டின் கொள்வனவு திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்த மதிப்பீட்டுக் கிரயம் 19,070,000 கூட்டுத்தொகையான 32 உப நீர்ப்பாசன செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.13 பதவியணியினர் நிருவாகம்

### 6.13.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர் எண்ணிக்கை

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 2,062 | 1,513 | 578 | 29 |
| மூன்றாம் நிலை | 770 | 915 | 183 | 263 |
| இரண்டாம் நிலை | 9,673 | 6,578 | 3,332 | 302 |
| ஆரம்ப நிலை | 4,428 | 4,158 | 1,389 | 919 |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | 13 | 01 | 12 | - |
| | - | 204 | - | 204 |
| மொத்தம் | 17,146 | 13,369 | 5,494 | 1,717 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,491 | 1,570 | - | 79 |
| ஆசிரியர்கள் | 24,818 | 21,482 | 3,336 | - |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவி பதவியணீயனர் | 2,285 | 1,885 | 400 | - |
| மொத்தம் | 28,594 | 24,937 | 3,736 | 79 |

(இ) உள்ளூராட்சி மன்றங்கள்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 93 | 74 | 21 | 02 |
| மூன்றாம் நிலை | 118 | 74 | 44 | - |
| இரண்டாம் நிலை | 2,025 | 1,511 | 550 | 36 |
| ஆரம்ப நிலை | 3,879 | 4,415 | 421 | 957 |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | - | 154 | | 154 |
| மொத்தம் | 6,115 | 6,228 | 1,036 | 1,149 |

(ஈ) நியதிச் சட்டங்களின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள்

| சிரேஷ்ட நிலை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மூன்றாம் நிலை | 02 | 03 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 05 | 03 | 02 | - |
| ஆரம்ப நிலை | 05 | - | 05 | - |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | 09 | 06 | 03 | - |
| மொத்தம் | 21 | 12 | 11 | 01 |

6.13.2 பதவியணியினர் நிர்வாகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லக்கல பிரதேச செயலகத்திற்காக மத்திய மாகாண சபையின் 06 பதவிகளுக்காக 06 உத்தியோகத்தர்களுக்கு

அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டு பூராகவும் அப்பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ii)

(iii) ஆரம்ப உப ஆசிரியர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு வலபனே வலயத்தின் பாடசாலையில் சேவை புரியும் ஆசிரியரொருவருக்கு மாகாண சபை அமைச்சரின் பொது இணைப்பு உத்தியோகத்தர் பதவி வழங்கப்பட்டிருந்ததுடன் வலயத்தின் ஆரம்ப கல்வி ஆசிரியர் பற்றாக்குறை 57 காணப்படும் போது 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இவ் ஆசிரியர் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை ரூபா 2,943,421 ஆசிரியர் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் தேசிய ஆசிரிய இடமாற்ற கொள்கை தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் வசதியான பாடசாலையொன்றில் கூடிய சேவைக்காலம் 08 ஆண்டுகள் எனவும் மிகவும் வசதியான பாடசாலையொன்றில் கூடிய சேவைக்காலம் 06 ஆண்டுகள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 03 வலயங்களுக்குரிய 430 ஆசிரியர்கள் 08 ஆண்டுகள் முதல் 36 ஆண்டுகள் வரையான காலவீச்சில் ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வந்திருந்ததுடன் அதில் 80 பேர் முதல் நியமனம் பெற்ற பாடசாலையிலேயே இதுவரை சேவை புரிந்து வருகின்றனர்.

(v) 2003 திசெம்பர் 02 ஆந் திகதிய 04/03 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் VI ஆம் பிரிவின் பிரகாரம் வெற்றிட பதவிகளுக்காக பதில் கடமை மற்றும் கடமை மேவுகை செய்வதற்கு நியமனம் நேர்முக பரீட்சையொன்று மூலம் மாகாண அதிகாரியினால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், 04 விடயங்களுக்குரிய 94 பாடசாலைகளில் 02 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரையான காலமாக வெற்றிடங்கள் காணப்பட்ட அதிபர் சேவையின் பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் மாகாண கல்வி செயலாளரினால் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) 2000 யூன் 30 ஆம் திகதி 2000/02 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதி கல்வி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக பதில் கடமை புரிவதற்கோ அல்லது கடமை மேவுகை செய்வதற்குரிய நியமனமொன்று அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக நுவரெலியா மற்றும் ஹட்டன் கல்வி வலயங்களில் இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையில் பதவிகள் வகிக்கும் 21 ஆசிரியர்கள் அப்பதவிகளுக்காகக் மாகாண கல்வி செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தது.

(vii) தலைமை அமைச்சரின் பதவியணியினரில் 06 பதவிகளில் 18 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக இருந்ததுடன் அவர்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ஏற்கப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக அவர்கள் இணைக்கப்பட்டிருந்த 05 நிரந்தர சேவை நிலையங்களிலிருந்தும் ரூபா 2,315,315 தொகை அந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன.

(viii) கொத்மலை வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகளின் எண்ணிக்கை 18 ஆக இருந்த போதிலும் 26 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், வெற்றிடமாக உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு அவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகளின் எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும் 24 பேர் இணைக்கப்பட்டிருந்தனர். ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படாத 21 பேர்களுக்காக 2015 ஜனவரி 01 முதல் 2015 செப்தெம்பர் 30 வரை சம்பளமாக ரூபா 6,588,642 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ix) கலேவல வலயக் கல்வி அலுவலகத்தில் கல்வியுடன் நேரடியாக தாக்கமளிக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை பரிசோதகர் போன்ற 04 பதவிகளில் 63 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர்களைக் கொண்டு அப்பதவிகளில் கடமை மேவுகை செய்யப்பட்டிருந்தது.

(x) கலேவல வலயக் கல்வி வலயத்தில் ஆசிரியர் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படாமையால் 10 பாடங்களுக்குரிய 173 ஆசிரியர் வெற்றிடங்களும் 07 பாடங்களுக்குரித்தாக 111 ஆசிரியர் மிகைகளும் காணப்பட்டன.

(xi) கலேவல வலயக் கல்வி வலயத்தில் வருடாந்த ஆசிரியர் இட மாற்றம்க் கொள்கை செயற்படுத்தப்படாமையால் ஒரே பாடசாலைகளிள் அதிக காலம் சேவை புரியும் ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும், பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் ஆசிரியர் மிகையும் காணப்பட்டன.

(xii) 03 வலயக்கல்வி அலுவலகங்களுக்குரிய 1997 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை நியமனம் பெற்ற 93 ஆசிரியர்களின் தகுதிகாண் காலம் பூர்த்தியடைந்திருந்த போதிலும் வெவ்வேறு காரணங்கள் காரணமாக சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் இருந்ததுடன், தாபன விதிக் கோவை ii ஆம் அத்தியாயத்தின் 11.2.3 ஏற்பாடுகளின் பிரகாரம் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது தகுதிகாண் நியமனத்தை முடிவுறுத்தவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(xiii) அநேகமான உள்ளூராட்சி மன்றங்களில் தொழிலாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர்களாகவும் அதற்கு சமமான பதவிகளுக்குரிய பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**6.14 வாகன நிர்வாகம்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 முதல் 2015 ஆம் ஆண்ட வரை 03 ஆண்டுகளில் தலைமை அமைச்சின் கீழ் 06 வாகன விபத்துக்கள் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,918,796 ஆக இருந்ததுடன், காப்புறுதி உரித்தாக ரூபா 1,410,736 தொகை கிடைக்கப்பெற்றிருந்தது. காப்புறுதியால் மேவுகை செய்யப்படாத ரூபா 4,508,060 தொகையான நட்டம் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் வாகனமொன்று 2015 யூலை 08 ஆந் திகதி விபத்திற்குட்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் போது 2015 யூலை 15 ஆந் திகதிய 38 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக ரூபா 139,622 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன்ரூபா 506,183 பெறுமதியான 14 உப பாகங்கள் வாகனத்திற்கு புதிதாக பொருத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பழைய உபபாகங்கள் மீளக் கையேற்கப்பட்டமைக்கு எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை.

**6.15 வங்கிக் கணக்கு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 நிறுவனங்களின் வங்கி நடைமுறை கணக்குகளுக்குரிய கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதம் கடந்திருந்த ரூபா 35,643,209 கூட்டுத்தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ)இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.16 உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளின் மேற்பார்வை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது சரத்தின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் மேற்பார்வை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் கணக்குகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் 43 உள்ளூராட்சி மன்றங்களில் 42 இன் நிலுவை வருமானம் 1,074,439,141 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலிய மாவட்டங்களின் 07 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சட்டத்திற்கு முரணாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கவனயீனம் அல்லது முறைகேடுகளால் இடம்பெற்ற நட்டங்கள் காரணமாக ரூபா 11,939,158 ஆன 21 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| கண்டி, | 01 | 136,466 |
| மாத்தளை | 11 | 11,102,692 |
| நுவரெலிய | 09 | 700,000 |
| மொத்தம் | 21 | 11,939,158 |

(ஈ) நுவரெலிய மாநாகர சபை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 திசெம்பர் வங்கிக் இணக்கக் கூற்று தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 423,631 காசுப் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2,226,476 ஆன முற்பணம் 2016 சனவரி 20 ஆந் திகதியளவிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இறுதியாக தயாரிக்கப்பட்ட வங்கிக் இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 யூன் முதல் 2015 பெப்ரவரி வரை வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் காலாவதியான ரூபா 139,571 பெறுமதியான 38 காசோலைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவிற்கு முரணாக மாநகர சபையால் 1985 முதல் 1995 வரை 30 சந்தர்ப்பங்களில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் சனாதிபதியினதும் அங்கீகாரமில்லாமல் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(v) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 237(1) ஆம் பிரிவிற்கு முரணாக மாநகர சபை 2000 ஆம் ஆண்டில் சொத்துக்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் வருடாந்த பெறுமதி அமுலாகும் பௌதீக மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) சபையின் நான்கு பிரிவுகளில் 338 பேரினது ஊழியர் மிகையொன்று காணப்படுகையில் மீளாய்வாண்டினுள் மேலதிக நேர படிகளாக ரூபா 8,298,955 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மாகாண சபையின் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்பாடுகள் நலிவான நிலைமையில் காணப்பட்டன.

### 7.3 பெறுகைகள் திட்டம்

(அ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக மாகாண பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களுக்காக தேவைப்படுகின்ற மூலதன பொருட்கள் கொள்வனவிற்காக ரூபா 129.38 மில்லியன் மதிப்பீட்டு தொகையொன்றுடன் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 96.38 மில்லியனான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தலைமை அமைச்சின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த மூலதனச் செலவினம் ரூபா 844,420,000 ஆக இருந்த போதிலும், திட்டம் ரூபா 52,500,000 இற்கு மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 10 மில்லியனிற்கு மேற்பட்ட பொருள் மற்றும் சேவை வழங்கலுக்காக அமைச்சு கொள்வனவுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்கள கொள்வனவுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட 03 சந்தர்ப்பங்களில் ரூபா 41,113,800 பெறுமதியான சிகிச்சை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**7.4 ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்**

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை பின்வருமாறு

| ஆண்டு | அறிக்கை திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2010 | 2011.12.30 | 2013.04.23 |
| 2011 | 2013.03.28 | 2015.09.08 |
| 2012 | 2014.07.04 | 2016.02.16 |
| 2013 | 2015.01.07 | 2015.05.05 |
| 2014 | 2015.10.08 | 2015.11.03 |

**7.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

பசுமை நகர வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொம்போஸ்ட் கூடங்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 02 நிறுவனங்களிடமிருந்து 2014 நவம்பர் மாதத்தின் போது ரூபா 297,000 ஆன பங்களிப்பு தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் அப்பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய 250 கொம்போஸ்ட் கூடைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) மாகாண சபை அபிவிருத்தித் திட்டம்
(உ) உள்ளூராட்சி மன்றங்களைக் கண்காணித்தல்
(ஊ) பதவியணியினர்